Registered at the G. P. O Colombo As A Newspaper.

# திராவிடன்

THE DRAVIDAN.

A Monthly Newspaper.

"சமன்செய்து சீர்தூக்குங்கோல்போலமைந்தொருபாற் கோடாமைசான்றோர்க்கணி."

**சந்தா விளம்பரம்.**

| | |
|---|---|
| தபாற்செலவின்றி வருஷம் ஒன்றுக்கு | ரூ. 1-00 |
| தபாற்செலவு உட்பட ,, ,, | ரூ. 1-25 |
| மலாய்நாட்டிற்கு ,, ,, | ரூ. 2-50 |

வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்
தனிப்பிரதி 10 சதம்.
முற்பணமாகவே அனுப்பவேண்டியது.

**விளம்பர விகிதம்.**

| | |
|---|---|
| 1 கலம் முதன்முறை | ரூ. 4 50 |
| $\frac{3}{4}$ ,, ,, | ரூ. 3 00 |
| $\frac{1}{2}$ ,, ,, | ரூ. 2 50 |
| $\frac{1}{4}$ ,, ,, | ரூ. 1 50 |

அடுத்தமுறைகளில் $\frac{1}{2}$ வாசி
சில்லறை விளம்பரங்களுக்கு ரூபாத்தொகை முற்காசு கட்டவேண்டும்.

புத்தகம்—1. { யாழ்ப்பாணம்.—சுன்னாகம்:—பிரபவஞு ஆவணிமீ கஉ (1927 ஆகஸ்டுமீ 17) புதன்கிழமை. } இலக்கம்—7.

உ
கடவுள் துணை.

அங்கிங்கெனாதபடியெங்கும்பிரகாசமா
யானந்தபூர்த்தியாகி
யருளொடுநிறைந்ததெதுதன்னருள்வெளிக்குளே
யகிலாண்டகோடியெல்லாந்
தங்கும்படிக்கிச்சைவைத்துயிர்க்குயிராய்த்
தழைத்ததெதுமனவாக்கினிற்
றட்டாமனின்றதெதுசமயகோடிகளெலாந்
தந்தெய்வமெந்தெய்வமென்
றெங்குந்தொடர்ந்தெதிர்வழக்கிடவுநின்றதெது
வெங்கணும்பெருவழக்காய்
யாதினும்வல்லவொருசித்தாகியின்பமாய்
யென்றைக்குமுள்ளதெதுமேற்
கங்குல்பகலறநின்றவெல்லையுளதெதுவது
கருத்திற்கிசைந்ததுவே
கண்டனவெலாமோனவுருவெளியதாகவுங்
கருதியஞ்சலிசெய்குவாம்.

## விசேஷ அறிக்கை.

1. திராவிடனுக்குச் சந்தாதாரராகச் சேர விரும்புங் கனவான்கள் முற்பணமனுப்பியேனும் அல்லது வி. பி. மூலமாயேனும் பத்திரிகையைப் பெற்றுக்கொள்ளலாம்.

2. பணமனுப்புகிறவர்கள் 'பொக்கிஷதார் யாழ்ப்பாணம் தாழ்த்தப்பட்டவர்களின் சங்கம், சுன்னாகம்' என விலாசமிட்டனுப்பவேண்டும்.

3. உள்ளூர்ச் சந்தாதாரர்களும் மேற்காட்டிய விதமே சந்தாத் தொகையைக் கட்டி ரசீது பெற்றுக் கொள்ளவும்.

4. கடிதமெழுதுவோர் தங்கள் விலாசத்தைத் தெளிவாய் ஒவ்வொருமுறையுமெழுதவேண்டும்.

திராவிடன் ஆபீஸ்,
சுன்னாகம்.

### அறிக்கை.

ஐயா, திராவிடன் பத்திரிகையின் சந்தா முற்பணமாகவே கொடுக்கப்படுகிறது. தயவுசெய்து தங்களால் வரவேண்டிய வருடசந்தா ரூபா 1—25 அனுப்பி எங்களை உற்சாகப்படுத்தி வைக்கும்படி கேட்கின்றோம். பத்திராசிரியர்.

### சுன்னாகம் நம் சாகியத்தவர்களுக்கு அறிவிப்பு.

தொண்டைமானூர்செல்வச்சந்நிதிகோயிலில் கட்டப்பட்டிருக்கும் மடம் இப்பொழுது பழுதடைந்திருப்பதனால் அம்மடம் புதுக்குவிப்பதற்காய் நம சாகியத்தவர் ஒவ்வொருவரையும் தங்கள் தங்களால் கூடியபொருளுதவிசெய்யும்படியாகக் கேட்கிறோம். சங்கத்தார்.

### மனிதன் குடலில் மாட்டுருவம் காணப்பட்டதாம்.

பேர்மாவில் ஒருவர் நெடுங்காலமாக வயிற்று வலியினால் வருந்திக்கொண்டிருந்தார் வைத்தியர்களைக் கேட்டபொழுது அவர்கள் குடலிலே சதை வளர்ந்திருக்க வேண்டுமென அபிப்பிராயப் பட்டனராம். அவர் ஒப்பிறேசன் செய்விப்பதற்காக ஒரு வைத்தியரிடஞ் சென்று வெட்டிப் பார்த்தபோது குடலிலேகாணப்பட்ட சதை மாட்டின் உருவம் பொருந்தியதாய் தலையிலே இரு சிறிய கொம்புகள் உடையதாய்க் காணப்பட்டதாம் அவ்வுருவத்தின் உடலிலே ரோமமும் முளைத்திருந்ததாம். அது பழுதுபட்டுப்போகாதபடி கண்ணாடிப் பெட்டிக்குள்ளே வைக்கப்பட்டிருக்கிறதாம்.

### புகையிரதம் பிந்துவதும் பிரயாணிகள் முந்துவதும்.

பெருவாகப் புகையிரதம் தனது வசதிக்கு மாத்திரம் ஓடுவதில்லை. பிரயாணிகளின் வசதியைக் கருதியே ஓடுவது. நம்நாட்டுப் பிரயாணிகள் அநேகர் புகைரத ஒழுங்கின் நேரத்திற்கென வந்தும் புகைரதம் முந்தி விடுவதே வழக்கம். இப்பொழுது சிலவாரமாக புகைரதம் குறித்த நேர[illegible]கு ஸ்டேசனுக்கு வராது சுணங்கிக்கொண்டே வருகிறது. இதுதான் நம்பிரயாணிகளுக்கு வசதிபோலும்.

### கருப்பநீரும் யந்திரமும்.

கள்ளுச் சேர்த்து வந்தவர்களுக்கு இப்பொழுது முயற்சியில்லாமையால் அவர்களுக்கு ஏதும்முயற்சி தேடிவிடுதல்வேண்டுமென்ற நோக்கம்பற்றி அரசாங்க கமத்தொழிற் பகுதியார் கருப்பநீரிலிருந்து சீனியுண்டாக்குதற்கான ஒருயந்திரத்தை இப்பொழுது தருவித்திருக்கின்றனராம். சில கிராம அங்கத்தினரும் வேறுசிலரும் இப்படி யந்திரங்களைத் தருவித்து கருப்பநீரிலிருந்து சீனியை ஆக்குவதற்கான முயற்சிகள் செய்கின்றனராம்.

### மாணிக்ககங்கையும் சவர்க்காரமும்.

கலியுகவரதராகிய சுப்பிரமணியப்பெருமான் கோயில்கொண்டருளிய கதிர்காமத்திற்கு யாத்திரைவாசிகள் "புசர்மா" வாசனைதிரவியம் பூசிக்கொண்டு செல்கின்றார்களாமே. மாணிக்ககெங்கையிலும் சவர்க்காரமிட்டு ஸ்நானஞ் செய்கிறார்களாமே. இங்ஙனம் பத்தியின்றி முறைதப்பி யாத்திரை செல்வதினாற்றான் யாத்திரை செய்வோர் பலர் சுரநோய்வாய்ப்படுகின்றனரென்றும், சிலர் அந்நோய் காரணமாக இறந்துபோகின்றனரென்றும் அறிவுடையோர் சொல்லுகிறார்கள்.

### மூன்று குழந்தைகளை ஒரேசமையம்பெற்ற ஆங்கிலேய மாது

லண்டனைச் சேர்ந்த புரூக்லி பார்க் என்னுமிடத்தில் மிசிஸ் ஜீ. ஈ. பிறைஸ் என்னும் பெயருள்ள ஒரு ஆங்கிலேய மாது சிலநாட்களுக்குமுன் 3 குழந்தைகளைப் பெற்றாள். அவைகளுள் 2 ஆண் 1 பெண். முதல் பெண்குழந்தை பிறந்தது. இரண்டுநாட் சுழித்து மற்ற இரண்டு ஆண் குழந்தைகளும் பிறந்தன. ஆண்குழந்தைகளிரண்டும் ஒரேமாதிரி அங்கலக்ஷணம் பொருந்தியிருப்பதால் வித்தியாசம் காணமுடியாதாம்.

### மரத்திலிருந்த மாமனை அணிலென நினைந்து சுட்ட மருமகன்.

சில தினங்களுக்குமுன் ஒரு சிங்களவன் தனது தோட்டத்திலுள்ள சம்புநாவற்பழங்களை அரித்துத் தின்றுவரும் அணில்களைச் சுடுவதற்காய் துப்பாக்கியுடன் சென்றிருந்தான். இதையறியாத மாமன் மரத்திலேறிப் பழங்களைப் பிடுங்குஞ் சத்தங் கேட்டதும் மருமகன் இலக்காகச் சுட்டான் அணிலல்லத் தன் மாமன் என்பதைப் பின்னர்தான் கண்டான் கண்டும்தான் செய்வதின்னதென்றறியாது தியங்கினான்; சூடுபட்டிறந்தவன் மரத்தின் அடர்ந்த கிளைகளுக்குள் அகப்பட்டுக் கிடந்தானாதலின் கீழே விழவில்லை கவனமின்றி சுட்ட குற்றத்திற்காகப் பொலீசார் அவன்மீது வழக்குத் தொடர்ந்திருக்கின்றனராம்.

### ஸ்ரீ மும்மூர்த்திகளை ஒரே சமையத்தில் பெற்றெடுத்த பண்டாரமாது.

மதுரைச் சில்லாவைச்சேர்ந்த கோம்பையில் வசிக்கும் மீனாட்சியம்மாள் என்னும் பண்டார மாதொருத்தி சென்றமாசத்தில் மூன்று ஆண்குழந்தைகளை ஒரே சமையத்தில் பெற்றெடுத்தாளாம். பிள்ளைகளும் புண்ணியவதியாகிய பெற்றவளும் சௌக்கியமாயிருக்கிறார்களாம்.

### தேனின் பிரயோசனம.

ஒரு டக்ரர் தேனின் பிரயோசனத்தைப் பற்றிச் சில குறிப்புகள் எழுதி வெளியிட்டுள்ளார் அவ்வெளியீட்டில் ஒரு றாத்தல் தேனைச் சேர்ப்பதற்கு 88000 தேனீக்கள் ஒன்றுசேரவேண்டுமென்றும் இயற்கைப் பொருட்களுள் தேன் மிகவும் விசேஷமானதொனறென்றும், தேனில் அயம் சுண்ணாம்பு கெந்தகம் தாதுப்பொருள் வெண்ணாகம் முதலியன சேர்ந்திருக்கின்றனவென்றும், தேன் தொண்டை நெஞ்சு சுவாசப்பை இருதயம் சீரணக்கருவிகள் என்னும் இவற்றில் காணப்படும் நோய்களுக்கேற்ற அவுடதமென்றும், அன்றியும் தேன் இரத்த விருத்திக்கும் நரம்புப் பலத்திற்கும் உரிய ஒரு சிறந்த பொருளென்றும், அதன் விசேஷ குணங்களைப் பட்டினவாசிகள் பெரும்பாலும் நன்கறியமாட்டார்களென்றும் கூறியிருக்கின்றார்.

### சிங்களமாதின் முறையீடும் அக்கிரமமும்.

கொழும்புப் பொலிஸ்கோட்டில் சென்ற சில தினங்களுக்குமுன் மிசிஸ் வீரசிங்கியென்னும் சிங்களமாது அவிசாவலைப் பொலிஸ் இன்ஸ்பெக்ரர் உட்பட்ட மூவர் தன்னை றிக்ஷோவண்டியினின்றும் கீழிறக்கிப் பலவந்தமாக ஒரு வீட்டுக்குக் கொண்டுபோய் அறையிற் பூட்டிவைத்து தன்னை அடித்தார்களென்றும தான் பொறுக்கமுடியாது சத்தமிட்டபோது அயல் வீட்டுக்காரர் வந்தனர் என்றும் பின்னர் அங்கிருந்து மோட்டர் வண்டியில் ஏற்றி தனது சகோதரி வீட்டிற் கொண்டுபோய் விட்டனரென்றும் இவையனைத்தும் கொழும்புக் கோட்டு பொலிஸ் இன்ஸ்பெற்றர் மகமது என்பவர் பார்த்துக்கொண்டு நின்றாரென்றும் முறைப்பாடு செய்தாள். எதிரிகளுக்கு நீதிபதி கட்டளை விடுத்திருக்கின்றனராம்.

### சங்கமும் அவசியமும்.

ஒரு சாதியார் முற்போக்கை அடைய விரும்பும் எந்நாட்டு மக்களும் ஒற்றுமை குன்றாது வாழ்தல் வேண்டும். ஒற்றுமையில்லாத மக்களின் இயக்கம் முன்னேற்றமடைய முடியாதென்பது திண்ணம். ஒற்றுமை கொண்டால் எதுகாரியங்களையும் இலகுவாய் முடித்துவிடலாம். ஆனதால் எம்மரபினர்க்கு ஐக்கியநிலை அதாவது ஒற்றுமை ஒழுக்கம் அவசியம் வேண்டும் எனவே நம்மரபினரால் இயங்கப்பெற்றுவரும் (The Jaffna Depressed Classes Association) என்னும் சங்கம் நாளடைவில்விருத்திபெற்றுவருகிறதற்கு ஒற்றுமை என்னும் கொம்பின் கிளைகளே எக்காரியத்திலும் பிரதானமெனினும் ஊக்கம் வழுவாது உழைப்பதற்கு முக்கியமான பல அநுகூலங்களைத் தேடிக்கொள்வதற்கும் இன்றியமையாத பண உதவியேயாகும். பண உதவியின்றி எந்த இயக்கமும் வலுவடைய முடியா. எனவே உங்கள் சங்கத்திற்குச் செலுத்தவேண்டிய சந்தாப் பணத்தைக் கூடியவரை சேகரித்து வைத்துக்கொள்ளவேண்டும். சகோதரர்களே! உங்கள் முன்னேற்றத்திற்குரியன செய்யவேண்டிய நற்கருமங்களை எவ்வகையிலுஞ் செய்யுங்கள். பின்வாங்காதீர்கள். பணம் பலம், ஒற்றுமை பலம் முதலியவைகளை உங்கள் சங்கத்திற்குச் சேகரியுங்கள். முற்போக்கு முயற்சிக்கு அவைகளே சிறந்தவைகளாகும்.

### கள்வனையடித்த சன்னியாசிக்குத் தீவெட்டியினல் சூடு.

சில தினங்களின்முன் அலிப்பூர் மாகாணத்தைச் சேர்ந்த ஓர் கிராமத்தில் வசித்த சன்னியாசியின் வீட்டில் திருடர் சிலர் புகுந்ததும், சன்னாசி பயந்து வீட்டின் கூரையில் ஏறினராம் ஏறிய சன்னாசியாரைக் கீழேயிறங்கச்செய்த பிரயத்தனத்தில், சன்னாசி திருடனொருவனுக்கு வீறான ஓர் அடி போட்டதே திருடன களைத்து விழுந்தானாம். இதனைக் கண்ட மற்றைய திருடர்கள் கோபங்கொண்டு சன்னாசியை தீவெட்டியினால் சுட்டுக் கொன்றுவிட்டனராம். சன்னாசியின் மனைவியையும் குழந்தையையும் வீட்டோடு எரித்துவிட்டதுடன் சன்னாசியின் அடியினால் காயப்பட்டகள்வனின் தலையையும்வெட்டி உடலை ஓர் குளத்துள் எறிந்துவிட்டுப் போயினராம்.

### பெற்றோர்களின் தவறுகள்.

"டிப்பிட்ஸ்" பத்திரிகையில் ஒரு டாக்டர் எழுதியதாவது.

நீர் குழந்தை பெற்றவரா? அப்படியானல் உமது குழந்தையிடம் நாளைக்கு எத்தனைமுறை "செய்யாதை!" என்று சொல்கிறீர். சணக்கிட்டுச் சொல்லும். அதைக் கணக்கிட்டால் திடுக்கிட்டுப்போவர். ஆயினும் அவற்றில் 100-க்கு 99 அநாவசியமாகும் தீமை பயப்பதுமாகும். குழந்தையை எதிர்மறைக் கட்டளைகளினாலேயே பயிற்சி செய்விக்கமுடியாது. சில உதாரணங்கள் கூறுகின்றேன்.

"கிரைப் பாத்தியை மிதியாதே!" ஒரு தாயார் சொல்லுகிறாள். "வழியோடு நட" வென்று சொல்லியிருக்கலாம். இரண்டும் ஒன்றுதானே? அன்று. கிரைப்பாத்தியை மிதித்தால் என்னும் எண்ணத்தை முதல் கட்டளை குழந்தையின் மனதில் புகுத்துகிறது. குழந்தையின் குணங்களில முக்கியமானவை இரண்டு. புதுவழியிற்புகுதல் சுதந்தரேச்சை முதற்கட்டளை குழந்தைகளின் இக்குணங்களைத் தூண்டிவிட்டுக் கிரைப்பாத்தியை மிதிக்கும் ஆவலை உண்டாக்குகிறது.

குழந்தை பால் அல்லது சலம் எடுத்துக்கொண்டுவரும்போது "சிந்தாதே!" என்று தாயார் சொல்லுகிறாள். அதனை 'ஜாக்கிரதையாகக்கொண்டுவா' என்றுசொல்லவேண்டும். சிலநாளைக்குமுன் இதைப் பற்றி ஒரு சோதனைசெய்தேன். சிந்தாதே என்று கட்டளையிடப்பட்ட குழந்தை பலமுறை சிந்திக்கொண்டே வந்தது "கவனமாய்க்கொண்டுவா என்று" சொல்லப்பட்ட குழந்தை ஒருமுறைகூடச் சிந்தாமல் கொண்டுவந்தது

மற்றும்இரண்டுகுழந்தைகளைக்கொண்டு வேறுமொரு பரிசோதனை நடத்தினேன். "உடம்பை ஆட்டாதே" என்று சொல்லப்பட்டுவந்த குழந்தை உடம்பை ஆட்டக் கற்றுக்கொண்டது. "அமைதியாய் உட்கார்ந்திரு" என்று கூறப்பட்டுவந்த குழந்தை அப்படியேசெய்யப் பழகியது. உடல் நலமுள்ள குழந்தைகளுக்கு இயற்கையாக எப்போதும் விஷமம் உண்டு. அதுவே போதும் எதிர்மறைக் கட்டளைகளினால் இன்னும் விஷமம் அதிகமாகிவிட்டால் குழந்தை வளர்த்தல் உண்மையிலேயே கஷ்டமாகிவிடுகிறது. "சாலையில் குறுக்கே ஓடாதே" என்று குழந்தைகளுக்குச் சொல்லுவதற்குப் பதிலாக "எப்போதும் சாலை ஓரமாக நட" என்று கூறிவந்தால் சாலை விபத்துக்கள் அனர்த்தங்கள் பல இல்லாமற் போனம்.

# திராவிடன்.

சுன்னுகம்:— 1927,
ஆவணிமீ 1உ புதன்கிழமை.


கண்ணின்று கண்ணறச் சொல்லினுஞ் சொல்லற்க, முன்னின்றுபின்னோக்காச்சொல். குறள்.

## திருவிழாவின் நன்மையும் வாணம் விடுவதின் தீமையும்

—:O:—

நம்சமயக் கோவில்களில் நடாத்தப்பட்டு வரும் திருவிழாக்களில் பெரும்பான்மையும் இந்த வாணவிளையாட்டினுற் பலபல முறைகளிலும் பலபல அநர்த்தங்கள் சம்பவித்துக் கொண்டே வருகின்றன. சென்ற மாதம் மாவிட்டபுரம் கந்தசுவாமிகோவிலில் கார்த்திகைத் திருவிழாவில் வாணத்தினுல் விளைந்த விபத்தை நேரில்கண்டோர் சொல்லக் கேட்கும்போது எவர்க்கும் அறியாது மனம் நடுங்குகின்றது. இத்திருவிழாக்கள் பக்திமார்க்கத்துக்குரிய விதமாக நடத்தப்பட்டு வருகிறதாய்க் காணப்படவில்லையே. சுவாமி தரிசனஞ் செய்வதற்கென்று எத்தனையோ மைல்களுக் கப்பாலிருந்துவந்த சனங்களுள் ஆண்களும் பெண்களுமாகக் கூடிய சனத்திரளில் விடப்பட்டதாகிய மத்தாப்புவாணம் ஒன்றினுலே உடனே இருவர் மாண்டனராம். பத்துப்பேருக்கு மேற்பட்ட ஆண்களும் பெண்களும் படுகாயமடைந்தனராம். இன்னும் இதுமாதிரிச் சிறுசிறு காயங்கள் அடைந்தோர் அநேகம்பேரென நாமனுமானிக்கவேண்டியிருக்கின்றன. இப்பாதக வாணத்தை விடாதபடிக்கு நமது அரசினர் கட்டுப்பாடு செய்யாது வாணம்விட விரும்புயோர் அரசினரின் அனுமதிபெற்று வாணம் விடலாமென்று சில கட்டுப்பாடுகளைச் செய்திருக்கின்றனர். இந்தக் கட்டுப்பாட்டினுல் வாணவிளையாட்டுகளில் முறைக்குமுறை நேர்ந்துவரும் அபாயங்கள் ஒருசிறிதேனுங் குறைந்தபாடில்லை. வாணஞ் செய்வோரும் அதிகரித்தே வருகின்றுர்கள். சிவமோசத்திற்குரிய வாணம் தன் எசமானைப்பார்க்குமா இதுபோன்றில்லாது வாணம் செய்யப்படுமிடங்களிலும் பெரும் அநர்த்தங்கள் நேர்ந்துகொண்டே வருகின்றன. இவ்வநர்த்தங்களில் நின்றும் பிரஜைகளை ரக்ஷித்தற்பொருட்டு நமது அரசினர் வாணஞ் செய்பவர்களுக்கும் விடுபவர்களுக்கும் அநுமதிகொடாதிருப்பதே முக்கிய கடமையாகும்.

## ஒடுக்கப்பட்டோரின் கூட்டம்.

சென்ற மாசம் 16-ந் திகதி யாழ்ப்பாணம் ஒடுக்கப்பட்டவர்களின் பிரசித்த கூட்டமொன்று கூடப்பட்டது. கூட்டத்தின் சபாநாயகராக ஸ்ரீமான் நேவின்ஸ் செல்வத்துரைப்பிள்ளை அவர்களே கூட்டத்தை நடத்தினுர்; ஒடுக்கப்பட்டோர் அநேகர் கூடியிருந்தனர். அத்தருணம் சபாநாயகரவர்களாற் பேசப்பட்ட விஷயத்தில் அரியவிஷயம் ஒன்றைமாத்திரம் இங்கு குறிப்பிடுகின்றேம். ஒடுக்கப்பட்டோரென ஒருசாதியில்லையெனவும் அவரவர்களின் ஒழுக்கம் முதலியன குன்றி மற்றையோரால் இகழ்ந்து புறக்கணிக்கக் கூடிய விதமாகத் தேகம் ஊண் உடை இவைகளைக் கவனியாது உங்களை நீங்களே கீழ்மையாக நடத்திக் கொள்வதினுலே தற்சமையம் மற்றைய சாதியினரோடு உங்களை நீங்களே ஒப்பிட்டுப் பார்க்குமளவில் யாழ்ப்பாணம் ஒடுக்கப்பட்டவர்களின் நிலையில் இருக்கவேண்டியிருக்கிறதெனப் பேசிமுடித்தார். விசேஷமாகக் கூட்டத்திற்குச் சமுகங்கொடுத்தோர் சுவாமி உருத்திரகோடிஸ்வரர் அவர்களும் றெவரண்ட் பாதர் பத்தியூஸ் அவர்களும் றெவரண்ட் பிக்கினல் அவர்களும், முதலியார் V. M. முத்துக்குமாரு மணியகாரன் அவர்களும் ஸ்ரீமான் சபாரத்தின சிங்கம் அவர்களும் இன்னும் பல பிரபுக்களும் கூடியிருந்தனர்.

## கல்வியே திருத்தம்.

—:○:—

முதலாக நமக்குவேண்டப்படுவேதுகல்வியறிவு. கல்வியறிவுகொஞ்சமும்இல்லாதுகண்டபாவனையில் ஒன்றைச்செய்து முடிப்போமெனத்தொடங்குவது பின்னும்அறியாமையைக்குறிக்கிறது. கல்வியே சகலநாகரீகங்களுக்கும் பிறப்பிடம். கற்றோர்க்கு விழி மூன்றெனச் சொல்லுவர் அறிவுடையோர் இன்னும் பஞ்சமாபாதகத்திற்குத் தலைவிரித்தாடும் மதவை பின்னரும் யாழ்ப்பாணமிருந்து அதினிமித்தமாக நம் தாழ்த்தப்பட்ட வகுப்பாரை மேலேற்றஞ் செய்யலாமென்பவர்களின் நெஞ்சைப் போலிருக்கும் சாரிருளைச் சூரியனுடைய ஒளி எவ்வண்ணம் பறக்கடிக்கின்றதோ அவ்வண்ணமே கல்வியானது மூடர்களுடைய மனஇருளைஒழித்து முன்னேற்றத்திற்குரிய வழியைத்திறந்து விடுகிறது. இன்னும் முழுவதுமே கல்வியறிவில்லாத ஒரு குடும்பத்தையும் இரண்டொரு கல்விமான்கள் பொருந்திய மற்றொரு குடும்பத்தையும் ஒவ்வொருவரும் கலைவிபயின்ற இன்னொரு குடும்பத்தையும் நீங்களே ஒப்பிட்டுப்பார்த்தால் கல்வியறிவின் வெளிச்சம் மேயற்படுகிறது இவர்களுக்கு எவ்வளவு புத்தியைப் போதித்தாலும்" வாழையடி வாழையென்றபடி தாங்கள் செல்லும் வழியே நல்வழியென்று பிடிவாதத்தோடு சாதிப்பர். கலைவிமான்களுடைய போதனைகளுக்கு கனவிலும் இடங்கொடார்கள். ஆனல் கல்வி வாசனையுடைய குடும்பத்தில் நாம் என்ன காண்கின்றேம். மனச்சந்தோஷம் சுத்த நாகரீகம்" சதா ஒற்றுமை" சகல உரிமைகளிலும் முன்னேற்றம் இன்னும் இதில் நாம் எழுதுவதற்கடங்காத பல அரிய விஷயங்கள் இவர்களிடம் கற்றுக்கொள்ளலாம். இவைகளையே நம்காண்கூடாகப்பார்த்திருந்தும் டலிக்குக்கொண்டு போகப்படும் ஆடு பூசாரியைப் பின்பற்றிப் போகிறதுபோல் நமக்குள் சதா வேற்றுமையை உண்டுபண்ணிக்கொண்டேவரும் மேல்சாதியினரை நாம் பின்பற்றிச் செல்லச் செல்ல, நாம் ஒருநாளும் முன்னடையப்போகிறதில்லை யென்பது திண்ணம்.

ஒரு தகப்பன் தன் பிள்ளைகளை எந்தெந்த நிலைமையில் வைத்து நடத்த விரும்புகின்றனே அவனெண்ணப்படி அவனுல் செயக்கூடுவதுபோல் நமது காருண்யம்பொருந்திய அரசாங்கத்தார் வேண்டுமென்றுமாத்திரம் நினைத்தால் நம்மவர்களுக்குக் கல்வியறிவூட்டுதல் அவர்களுக்குப் பெரிய காரியமல்ல. இப்படியே வாளா கூறுவதில் யாதும் பிரயோசனமின்றிநம்மக்களின் கல்விச்செல்வத்தை அவர்கள் அடையும்பொருட்டே நாம் பாடுபட்டும் முன் சொணவேந்தாலன்றி அவர்களின் பரிதாப நிலை மாறுவதற்கில்லையென்றே சொல்லவேண்டும்.

இரண்டாவதாக பூமிக்கும் வானத்திற்குமுள்ள ஆகாய விரிவைப்போல் மனிதகூட்டத்தைச் சேரவிடாது பிரித்துவைக்கும் சாதிப்பிசாசைப்பற்றியே இவ்விழிவான கட்டுப்பாட்டின் கொள்கைகள் நம்மை விட்டு நீங்குவதற்கும் நாம் அவைகளை விட்டு நீங்குவதற்கும் நமக்குள் ஒற்றுமைகொண்டு ஆசார சீர்திருத்தம் சுயமதிப்பு முதலியவைகளை அடைவதற்கு நாமே தெண்டிக்கவேண்டுமென்று நாம்ஒவ்வொருவரையுங் கேட்டுநிற்கின்றேம். இன்னும் நம் தாழ்த்தப்பட்டோர் என்பவர்கள் மேல்வகுப்பார் என்பவர்களுடன் சமத்துவமாய் வாழ விரும்பிவருகிறுர்கள். இது நன்மையும் நியாயமுமெனக் கண்டாலும் உயர்குலத்தோ ரென்பவர்கள் தம்மைக் கீழ்ப்படுத்தினுர்களென்று அவர்கள்மீது பழியைச் சுமத்தி யவர்களைத் தூஷிப்பதாலேயே உயர்வடைய முடியாது. நாம் இத்துணைக் கீழ்மையடைந்ததற்குக் காரணம் பிறவதுப்பாரெனக் கூறினும் பெரும்பாகம் நாமே காரணமென்பதை மறக்கலாகாது. ஆசாரத்தாலும் ஒழுக்கத்தாலும் தூய்மையடைந்தும் நாகரீகம்பெற்று நல்லுணவுகளையே உண்டும் நல்லாடைகளை யணிந்தும சன்மார்க்கபத்தி வழியில் எம்பெருமானை வழிபட்டும் ஊதியமுடைய நல்ல கைத்தொழில் வியாபாரம் முதலியவற்றை ஊக்கத்தோடு செய்து செல்வத்திற் சிறந்தும் நம்பிக்கை நாணயமுடையவர்களாய் நடந்தும் உலகில் பிறருக்கிருக்கும் எல்லாச் சுதந்திரங்களும் தமக்குமுண்டென வரித்து வரத் தலைப்படுவோர்களாயின் மேன்மையடைதல் சுலபசாத்தியமாகும். எக்காலத்தும் ஒழுக்கத்தால் உயர்ந்தோராயினுருண்டன்றி ஒழுக்கம் குன்றிநிற்கவும் பிறப்பினுல் உயர்வடைந்தவரில்லை. இவ்வுண்மையினை நீங்களோவ்வொருவரும் ஊன்றிக் கவனித்தல் அத்தியாவசியமாகும்.

## உலகசிருஷ்டியும் பேதமும்.

சர்வசிருஷ்டி சராசரங்களையும் படைத்துக் காத்து ரட்ஷித்துவரும் பரம கடவுள் ஒருவர் உண்டு என்பது நாமெல்லாரும் மறுக்கமுடியாத சத்தியம். ஆதலான் ஐந்துவுணர்வுடன் பகுத்தறிவை கொடுத்த சாக்ஷாத் பரம கடவுளுக்கு நாம் இப்பூவுலகம் முடிவுபரியந்தம எங்கள் மன்றுட்டமும் நமஸ்காரமும் செலுத்தக் கடமைபூண்டுள்ளோம். ஆயிரகிரணங்களைக் தாங்காகின்ற கதிரவனு யெறிக்குங் கொடும் வெயிற்கானலிற் நெடுவெளியினலக்களிவுற்று நீர்வேட்கைகொண் டிளைத்துத் தவிக்கின்ற மான் அதிவேகத்துடனே நாலுதிசையிலு மோடித்திரிந்து தண்ணீரைத் தேடுவதுபோல துன்பமும் துயரமும் நிரம்பிய இவ்வுலகிற் தம்நெஞ்சிற்சுடும் தீவினையவிக்கப் பூரணசெல்வம் பொழியு மூற்றெங்கேயெனத் தேடித்திரிந்துழலுவர் மக்கள் தாமதிகவாநந்த அனுபோகமடைதற்பொருட்டு சிருஷ்டிக்கப்பட்டிருக்கின்றமையால் எப்பொழுதும் அவசியமுமாய்த் தம்முட் கூடியிழுக்குமவ் வாசைப் பெருக்கை யடக்கமாட்டாது செல்வாக்கின் ஆசையொழியாத் தாகமுற்று அதனை அகறறும்பானமாகிய செல்வத்தையெங்காகினு மாவலோடு தேடி அனுபவிக்கத் தெண்டிப்பாராயினும் மெய்ப்பாக்கியம் பொருந்து மென்றறியாதவராய் பெருமை லௌகிக சந்தோஷ மகிமையின் வேஷம் சுகமுண்டென்றெண்ணி மற்றோரைத் தாழ்த்தி தம்மையுயர்த்தப் பிரயாசப்படுவர் சிலர் செம்பொன் முதலிய நவமணி திரவியங்களிற்றிருத்தியோடு செல்வமடங்குமென் றல்லும்பகலும் ஓபாத பிரயாசையோடு சம்பாதித்தல் வேண்டுமென பாடுபடுபவர்சிலர் சிற்றின்பமே லௌகிகமெனக்கருதி மிருகாதிகள்போன்று நாணம் வெட்கமின்றித் துற்சுபாவமாயுடைய துராசைகளையே நிறைவேற்றுவதன்பொருட்டு அதனையே விரும்பிப் பாவச் சேற்றில் புரளுவர்சிலர். மதுபானமே அதுதானமோக்ஷமென்று அருந்தி அவசங்கையீனப்படுவர் சிலர். ஆயினும் நீர்வேட்கைகொண்டு தவிப்பவன் கடனீரை விரும்பி யெவ்வளவாகக் குடிப்பானே அதுபோலவே தாகம்பெருகி நாவறண்டு நெஞ்சுலர்ந்து தேகம் நொந்து வாதையனுபவிப்பவன் இவ்வண்ணமே லௌகிக பெருமை திரவியசேட்டம் சிற்றின்ப ஆசையெல்லாந் தீரப் பூர்த்தியான சந்தோஷசெல்வம் உண்டாகு மென்றும் அதனையே தாம் நுகருவதற் கிருப்பவரொருபோதும் திருப்தியடையாது மாறுதலெய்தாது மென்மேலும் மனத்துட்சலிப்புடன் வறுமையைக்குவித்து மெய்ப்பாக்கிய மில்லையே எனத் துயரப்படுவர். இப்படியே கடவுளை நீக்கித் தம்மனம் போன பாட்டிற்கெல்லாம் புரண்டோடும் மாந்தற்கு தெய்வமும் இல்லை. சாதியுமில்லை தம்முளே பாதிக்கும் தர்மமுங் கடந்தோம் என்னும் பலபேசி வஞ்சிக்கும் பெரியோர்களே இறைவனுடைய திருவருளை முன்கொண்டு இயங்கிவரும் இம் மாநிலத்தில் பிறந்து, இருந்து, இறந்து இறந்துபோகின்ற எண்ணிறந்த பிறவிகள் தோறும் மக்கட்பிறவியே கிடைத்தற்கரியது. ஏனெனில் மற்றைய உடம்புகளில் வசிக்கும் ஆன்மாக்களானது வெவ்வேறு சரீர அமைப்புக்குத் தக்கதாகவும் தமதறிவுக்கேற்றவிதமாகவும் ஓரறிவுமுதல் ஐயறிவு வரையிலும் வாய்க்கப்பெற்றுளதாய் பழக்க சுபாவ உணர்ச்சிகொண்டு ஓர் சிறிதுமாத்திரம் பகுத்தறிவுடையனவாயிருக்க, மானுடதேகத்தைப் பெற்ற ஆன்மாக்களோ முற்கூறிய ஐயறிவோடும் நல்லன தீயன என்ற பகுத்துணரும் அறிவையும் நிரம்பப்பெற்றனவாயிருத்தலே என்பது ஆன்றோர் துணிபு. ஆகவே, இம்மகாமேன்மை நிரம்பப்பெறற மானுடயாக்கையைப் பெற்ற நம்மிலநேகர் நம்மை உண்டாக்கிக் காத்து ரட்சிக்கப்பட்ட ஈசனொருவருண்டென்றும் அவருக்கு நம்முடைய நன்றியறிந்த தோத்திரத்தைச் செய்யவேண்டிய அவசியமென்றும் அதற்காக நாம் அனுதினமும் அப்பரமசிவனை நினைத்து ஸ்மரித்து வரவேண்டியது நம்முடைய கடமையிலும் முக்கியமும் முதலாவதுமென்றும் கனவிலும் நினைப்பதுமில்லை. தோத்திரஞ் செய்வதுமில்லை. இன்னும் நம் தாழ்த்தப்பட்ட மக்களோ! இது விஷயத்தில் சுத்த சூன்யம். நம் மக்களுள் இந்துக்களாயிருப்பவர்களுக்கோ கடவுளுங் கிடையாது; மனத்தினில் சிந்திப்பதுங் கிடையாது; கோயிலுங் கிடையாது; கும்பிடுங் கிடையாது. ஏதோ வருஷத்திற்கொருமுறையோ அல்லது மறுமுறையோ நடத்தப்படும் உற்சவகாலங்களில் அதாவதுதேர்த்திருவிழாக்களில்தான் நம்மவர்கள் சுவாமியை தெருக்களில் தரிசிக்க முடியும் அதிலும் அகஸ்மாத்தாய் சுவாமியை கிட்டி நெருங்கிவிட்டாலோ தடிஅடியுடன் விடாது உதைத்தான் இது தான் நமக்கு சுவாமிதரிசனத்தின் பலன் போலும். அந்தோ என்ன பரிதாபம்! இது மாதிரியாலன்றே இந்துமார்க்கத்தின மகிமை குறைந்து அநேகர் பிறசமயத்தைத் தழுவும்படி நேரிடுகிறது.

இப் பிரபஞ்சத்தில் வாழும் மக்களனைவரையும் கடவுளானவர் ஒரே சாயலாய் சிருஷ்டித்தும, ஒரேவிதமாய் போஷித்தும் வர சிலரைமட்டும மேனமக்களென்றும் சிலரைக் கீழ்மக்களென்றும் பிரிவு யேற்படுத்தி மேனமக்களுககோர் கடவுளும, கீழ்மக்களுக்கோர் கடவுளென்றும நூல் முதலியனவற்றில் வகுக்கப்பட்டிருக்கின்றதென எந்த ஆபாசபுராணம போதிக்கின்றதோ தெரியமாட்டாது. எல்லாம் கடவுளுக்கே வெளிச்சம.

இன்னும் மேலோரென்று சொல்லிக்கொள்பவர்கள் கீழோரென நினைத்திருக்கும் தங்கள சகோதர சகோதரிகளாகிய தாழ்த்தப்பட்டவாகளை தங்கள கோயில்களுக்குச் சமீபத்திலும். வரக்கூடாதென்றும நகை முதலிய ஆபரணச் சிறப்பைக் காட்டுவதறகோ என்றும் அக்கோயில்களில நடைபெறும தோத்திரம் பாடல் முதலான கீதக்காஷ்டி காதிலுங் கேட்கப்படாதென்றும நிர்ப்பந்தப்படுத்துவது எத்துணையும பொருநதாத செயல்தானே. கடவுள் ஒருவரே யெனறும அவர் எல்லாச் சீவராசிகளுக்கும் பொதுவென்றும அவரைக் கிரிகைகளினுலும மனத்தினுலும வணங்கி அப்பரம்பொருளை வேண்டிக்கொள்வோம,

சுபம.

திராவிடநண்பன.

## நீதிவிளக்க விவேகசாகரம்.

கெட்ட நாற்றமுடைய வாசனையைமறைத்து மூடிவைத்திருந்த போதிலும அது மிகவும தூரத்தில சென்று பரவுகின்றது. அதுபோல ஒருவனுடைய துஷ்ட நடபடிகளை எவ்வளவு மறைத்து வைத்திருப்பினும அவை எங்கும சென்று பரவிவிடும.

* * *

தவளைகள் தாமரைப்பூவின் சமீபத்திலிருந்தாலும அதிலநின்று ஒழுகும் தேனையுண்ண அறிகிறதில்லை. எங்கேயாவுள்ள வண்டுகள வந்து தேனை அருந்துகின்றது. அதுபோல எத்தனையோ நன்மைகள சமீபத்திலிருந்தாலும மூடர்கள் அறிவுடையோர்களிடத்தில அறியவேண்டியவைகளை அறிவதில்லை. விவேகிகளோ வெகுதூரத்திலிருந்தபோதிலும அறிவுடையோரை அடுத்து கிரகிக்கின்றாகள்.

* * *

மழைத்துளியானது வானத்தினின்று பழுக்கக்காச்சின யிரும்பில் விழுந்தால் காணுமற போகின்றது. தாமரையின இலையில் விழுந்தால் முத்துப்போலத தெரிகிறது. சமுத்திரத்தில் வாழும சிப்பியின வாய்க்குள் விழுந்தால முத்தாயவிடுகின்றது. அதுபோலவே அறிஞர்களால் எடுத்தோதப்படும ஒவ்வொரு சொறகளும கிரகிப்பவாகளுடைய பக்குவத்துக்குத தக்கபடி விளங்குகின்றது.

* * *

கிருமிகள் மொய்த்த மாம்பழம ஒன்றை குருடன் ஒருவன் மிகவும் நன்றாயிருக்கிறது என்று புசிக்கின்றுன் அப்பொழுது குருடனின் கணகள் பார்க்கும்சக்தி கிடைக்கப் பெறுமாயின எண்ணிறந்த புழுக்கள் அப்பழத்தில் நெளிவதைக் கண்டு அருவருத்தவனுய் தூரத்தில் எறிந்துவிடுவான். அதுபோலவே நன்றாயிருக்கிறது சுகமாயிருக்கின்றது என்றுசொல்லி உலகவிஷயங்களை அனுபவிப்பார்கள். திடீரென விவேகமானது உதிக்குமாயின அவைகளின ஒற்றுமையை யொழித்து அவர்கள் தூரத்தில் விலகிவிடுவார்கள்.

* * *

வெள்ளை, சிவப்பு,நீலம் முதலிய பலவர்ணங்களையுடைய கண்ணுடிகளாற செய்யப்பட்ட அறையொன்றிற் புகுந்த ஓர் ஞமலி சுற்றிலுமுள்ள கண்ணுடிகளிற் பலநிறங்களிலுள்ள அநேக நாய்கள தோன்றுவதைக்கண்டு ஏகங்ணம முறு முறுத்துக் குரைக்கின்றதோ அங்ஙனமே பல வேறுபாடுகளையுடைய முக்குணங்களால் நிரம்பப்பெற்ற மாதரிற சிலா தயயைச சூழ்ந்துள்ள ஆத்மகோடிகள யாவரும ஓரா ஆத்மாவின் பிரதிபிம்பங்களென் றுணராமல அவர்களுடன் சீறித் துவேஷிக்கின்றுர்கள். இவைக்கு எதனை ஒப்பிடலாம்.

* * *

ஓர் கூத்தாடியானவன் நெடிய கம்பத்தினுச்சியில் நின்றுகொண்டு அநேகவிதமான வித்தைகளைக் காட்டுகின்றுன் அப்பொழுது அவனுடைய திறமையான சாதுரியத்தைக்கண்டு அநேகர் மெச்சுகிறுர்களாயினும் அவன் கம்பத்தினுச்சியில் நிற்கும்வரை அவனுக்குச சேரவேண்டிய வெகுமதி கிடைக்கிறதில்லை. அதுபோலவே அகங்காரத்தினுச்சியில நின்று கொண்டு வேண்டியவாறு ஞானப்பிரசங்கம் செய்யும் ஒருவனைப் பலபேர் மெச்சினும அவன் ஆணவத்தின முகட்டில் நிற்கும்வரை அவன் செயல் சித்திக்கிறதில்லை.

* * *

ஒரு கூட்டத்தினரை உற்சாகத்தோடு தூண்டிவிடுதற்கு அண்டப்புளுகரும் வேண்டிய தலையை ஆட்டி மயிரைசசிலுப்பி நான் அப்படிச் செய்வேன், நான இப்படிச்செய்வேன ஆகாசமார்க்கமாய்ச் சிறகுகொண்டுபறப்பேன் அந்தரத்தில் நிற்பேன் வேண்டுமென்ற கண்டால் உலகத்தையும் ஒருநொடியில் தாண்டுவேன் எனப் பேசுவதற்கு புளுகரும் வேண்டுந்தான்.

## பொதுச்சமாச்சாரம்.

காலநிலை:— வெய்யிலதிகம் மழைக்கோல மிருந்தும் மழை இல்லை. காற்று அடைநியாய் விட்டது. ஊர்ச்சுகம் பொதுப்பட நன்மை யென்றே சொல்லவேண்டும்.

நல்லூர்க் கந்தசுவாமிகோயில் உற்சவதிற்காய் மவிவு ரிக்கற் இந்த (ஆகஸ்டு) மாசம் 19-ந் திகதி தொடக்கம் 25-ந் திகதி வரைக்கும் 30 மைலுக்கப்பாலுள்ளவர்களுக்கே வசதியாக இருக்குமாம்.

புன்னாலைக்கட்டுவனில் ஒரு உப தபாற்கந்தோரேற்படுத்தித் தரும்படி அவ்வூரவர்கள் விடுத்த கேள்வியை தபாற்பகுதித் தலைவரங்கீகரித்து அவ்விடத்திலோர் உப தபாற்கந்தோரை ஸ்தாபிப்பதற்குரிய ஆயத்தங்கள் செய்கின்றனராம்.

சென்ற வாரம் கொழும்பு கொட்டாஞ்சேனையில் சில கள்வர் இரவில் ஒரு வீட்டிற் புகுந்து பணமாக 4000 ரூபாவும் 1000 ரூபா பெறுமதியுள்ள நகைகளும் எடுத்துச் சென்றுவிட்டனராம். பொலிசிலின்னும் பிடிபடவில்லையாம்.

இலங்கைத் தேசாதிபதியாக நியமிக்கப்பட்டுள்ள சேர் ஹெர்பர்ட் ஸடான்லியும் அவர் மனைவியும் ஜூலை மாசம் 23-ந் திகதி தென்னாபிரிக்காவிலிருந்து புறப்பட்டுவிட்டார்களாம். இதுவரை வடக்கு ரொடேஷியா கவர்னராக இருந்தவராம்.

பொலிஸ் இன்ஸ்பெக்ரரை அடித்தமை கொழும்பு கோட்டைப் பொலிஸ்தானத்தைச் சேர்ந்த உப பரிசோதகர் கோல்மன் என்பவரை ஆபிரகாம் என்பவன் பொலிஸ்தானத்திற்றானே அடித்தான் என்று தொடரப்பட்ட வழக்கில் எதிரிக்கு 2 மாசக் கடுங்காவற் றண்டனை விதிக்கப்பட்டது.

மகாத்மா காந்தியவர்கள் புரட்டாசிமாச முற்பகுதியில் இலங்கைக்கு வருவாரென்பதாகச் சில பத்திரிகைகள் கூறுகின்றன.

ராமநாதபுரம் ஜில்லா போர்டின் உபதலைவர் ஸ்ரீமான் மாணிக்கவாசகம்பிள்ளையின் மனைவியாரை அதிகாரிகள் ஒரு கௌரவ மாஜிஸ்ட்ரேட்டாக நியமித்திருக்கிறார்களாம்.

றோயல் கமிஷனுக்கு லார்ட் டோனூமூர் அக்கிராசனகவும், சேர். மத்தியுநாதன், டக்றர். டிராமண்ட்ஷீல்ஸ், சேர். ஜோவ்றி பற்லர் என்னும் மூவரும் அங்கத்தினராகவும் நியமனம் பெற்றிருக்கின்றனராம்.

ராஜப்பிரதி இர்வின் பிரபு பெங்களூருக்கு சென்றிருந்த பொழுது சென்ற மாசத்தில் (28-7-28) மகாத்மா காந்தியை தமது இருப்பிடத்திற்கு வரவழைத்து சுமார் இரண்டு மணி நேரம் பேசிக்கொண்டிருந்தாராம்.

சுவாமி சத்தியானந்தரும் அவரது சபையினரும் சேர்ந்து சந்தோல் கிறீஸ்தவரில் 300 குடும்பத்தினரை இந்துமதத்திற் சேர்த்துக் கொண்டனர். இன்னும் டக்கா இந்து மகா சபையார் ஒரு கிறீஸ்தவ குடும்பத்தை இந்து மதத்திற் சேர்த்துக்கொண்டனர்.

மகமதியர்கள் இந்துக்களானமை: சென்றமீ 14-ந் திகதி தோர்காபுசேரம் வாக்ஜிநூர் கிராமங்களிலுள்ள 75 மவுலானு முஸ்லீம் குடும்பத்தினரை பம்பாய் மாகாண இந்து சபையார் சுத்திசெய்து இந்துமதத்திற் சேர்த்துக்கொண்டார்களென்று சென்னைத் திராவிடன் தெரிவிக்கின்றது. மௌல்விபசலகிரீம் என்பவர் தம் மனைவி மக்களுடன் இந்துமதத்தைத் தழுவினரென்று சுதேசமித்திரன் கூறுகிறது.

மிருகபலியிடுதலைத் தடுத்தல்: பம்பாய் நகரிலுள்ள மிருகஹிம்ஸா நிவாரண சங்கத்தாரின் முயற்சியினுல் இந்தியாவிலுள்ள சில கோயில்களில் ஆடு கோழிகளை வெட்டிப் பலியிடும் பாமர சனங்களின் வழக்கத்தை நிறுத்துவதற்கான பிரமாணங்களைச் செய்துவிடல் வேண்டுமென அரசாங்கத்தினரையும் மற்றும் சுதேசமன்னரையுங் கேட்டிருக்கின்றார்களாம். இதுபோன்ற பிரமாணத்தை இலங்கையாருங் கையாழுதல் வேண்டும்.

## அரச குடும்பத்தின் வருமானம்.

அரசகுடும்பத்தினருக்கும் அரசருக்கும் கொடுக்கப்படும் உபகாரச் சம்பளத்தைக்கொண்ட ஜாபிதாவுக்கு றயல் லிஸ்டு என்று பெயர். ஒவ்வொருவருடைய ஆட்சிக்காலத்திலும் இந்த ஜாபிதாவில் மாறுதல் உண்டாகின்றது.

எட்வர்டு சக்கரவர்த்தி பட்டத்திலிருக்கும் பொழுது அவருக்கு வருஷம் ஒன்றுக்கு 4,70000 பவுன் கொடுத்துவந்தனர் 1910 அவர் இறந்த பிறகு ஜார்ஜ் சக்ரவர்த்திக்கும் அவருடைய மனைவிக்கும் அதே தொகையைக் கொடுத்துவந்தனர் அத்தொகை அடியிற்கண்டபடி செலவிடப்பட்டுவந்தது. சொந்தச் செலவிற்காக 1,00,000 பவுன் அரச குடும்பத்தில்வேலைபார்ப்பவர்களின் சம்பளத்தொகையில் **1,25800** பவுன் அரண்மனைச் செலவுக்காக 1,93,000 பவுன் சில்லரைச்செலவுகள் **23,200** பவுன் மற்ற திட்டமில்லா ச்செலவுகளுக்காக **8000** பவுன்.

அதல்லாமல் ஜார்ஜ் சக்ரவர்த்திக்கு லங்காஷயர் வரிமூலம் **70,000** பவுன் வருஷமொன்றுக்குக் கிடைக்கிறது இந்தப்பணத்திலிருந்து இவ்வரசருக்கு எதுவும் கொடுக்கப்படுவதில்லை ஏனெனில் சான்வால் ஜமீனில் வருஷா வருஷம் வரி வசூல் அதிகரித்துக் கொண்டிருப்பதால் அத்தொகையே அவருடைய செலவுக்குப் போதுமானதாயிருக்கிறது. ஆனல் அவருடைய கல்யாணத்திற்கு மாத்திரம் தொகை ஒதுக்கி வைத்திருக்கின்றனர் அவருக்கு மனைவியிருந்தால் வருஷத்திற்கு 10,000 பவுன் கொடுக்கிறனர் அவர் வைம்பெண்ணாக விட நேரில் வருஷம் ஒன்றுக்கு **30,000** பவுன் கொடுக்கின்றனர்.

அரசரின் இளைய குமாரர்களுக்கு வயதையடைந்துவிடில் வருஷம் ஒன்றுக்கு 10,000 பவுன் கொடுக்கப்படுகிறது கல்யாணமாகிவிட்டால் அத்தொகை **10,**000 மாகிவிடும் சக்ரவர்த்தியின் குமாரிக்கு அவளுடைய **21** வது வயதுக்குப்பிறகு 6,000 பவுன் கொடுக்கின்றனர்.

1683 வில்லியமும் மேரியும் பட்டாதிருந்த வந்தது முதற்கொண்டு இந்த ஜாபிதா அமுலிலிருந்து வருகிறது அக்காலத்தில ஸிவில்லிஸ்டுக்கென்று 7,00,000 பவுனை ஒதுக்கி வைத்தார் அந்தத் தொகையிலிருந்துதான் நீதாதிகத்துக்கு ஜட்ஜுகளுக்கும் சம்பளமும் கொடுக்கப்பட்டு வந்தது. (தமிழ்நாடு)

## புலால் உண்ணலாமா?

பரமசிவானுல் படைக்கப் பெற்ற இவ்வுலகத்துள், மக்கள் பிறப்பை யடைந்தோர், புலாலுண்ணலாமா எனுனுங் கேள்வி யாண்டும் கேட்கப்படுகின்றது. இக்கேள்விக்கு அறிஞர் பலரும் ஒரே விடை தான் விடுத்திருக்கின்றனர். அதாவது, மனிதன் அறிவுக்களஞ்சியமாய படைக்கப்பட்டிருக்கிறனென்றும், மனிதன் ஒருவனுக்கே பகுத்தறியும் உணர்வு ஈசுவரனுல் கொடுக்கப்பட்டிருக்கிறதென்றும், அவ்வுணர்ச்சி இல்லா தமிருகம், பறவை முதலிய ஐயறிவுடைய ஜெந்துக்களைப் போன்றார் மாக்களென்றும், பகுத்துணர்ந்து அறத்தின் வழியிலே நின்று எவ்வுயிருந் தன்னுயிர் போலப் பேணுதல் செய்து "அஹிம்ஸா பரமோ தர்ம" எனபதைக் கைக்கொண்டு புலையுங் கொலையுங் களவுந் தவிர்த்து, தவம் தூய்மை, தத்துவநூலோர்தல், மனம் உவந்திருத்தல், தெய்வம் வழிபடல் முதலான இயம நியமாதிகளை விரதமாகக் கொண்டு வாழ்வோரே மக்களென்றும் அன்னர் எவ்விடத்தும் எக்காலத்தும் பிற ஜீவராசிகளைக் கொன்று அவற்றின் புலாலைத் தின்று உடல் வளர்ப்பதை வெறுத் தொதுக்கி வாழ்வாரென்றும், புலாலுண்ணுதல் மனித ஜென்ம மெடுத்தோர்க்குக் கூடாதென்றும், அரக்கர் ராக்ஷஸர் முதலியவர்களுங் கூட தவத்தைக் கருதியது, மாமிசாதிகளை விட்டு வடும் போது, மனிதன் அதை எவ்வளவு தூரம் வெறுத்தொதுக்க வேண்டு மென்பது சொல்லாமலே விளங்குமென்றுங் கூறியிருக்கின்றனர். கீழ் வருவன இவற்றை விளக்கப் போதுமானது.

'போல்லாப் புலாலை நுகரும்'' என்று திருமூல நாயனுரும், "கொலைவினைய ராகிய மாக்கள புலைவினையர்'' 'உண்ணாமை வேண்டும் புலால்'' "செயிரிற் றலைப் பிரிந்த காட்சி யாருண்ணார், உயிரிற் றலைப் பிரிந்த ஊண்'' 'உயிர்க் குறுகண்செய்யாமை அற்றேதவத்திற்குரு'' என்று திருவள்ளுவரும் "ஊனைத் தின்று ஊனைப் பெருக்காமை முன்னிமுதே'' என்று மற்றும் மறிஞரும் கூறியிருத்தலால், புலாலுண்ணுதல் கூடாதென்றும், அவை நமது தவத்தையுங் கெடுத்து நரகத்திற்கு ஆட்படச்செயயு மெனவும் உணர்ந்து இன்றே புலாலுணவை நீக்கி இம்மை மறுமைக்கு வேண்டிய நல்வழி செல்வோம்.

(அறுப்புக் கோட்டை ஜீவகாருண்ய பிரசார சபை வெளியீடு)

## கலைமகள்.

ஓர் சிறந்த இனிய தமிழ்ப்பத்திரிகை. மாசந்தோறும் வெளிவருவது தமிழ்மொழி சைவசமயம் நாகரிகம் முதலியனவற்றின் வளர்ச்சிக்குரிய புதிய விஷயங்களும் இலக்கண இலக்கிய சரித்திர ஆராய்ச்சிகளும் இனிமையும் புதுமையும் வாய்ந்து (Original) தமிழ்க் கதைகளும் (Noval) இதன்கண் அறிஞரால் எழுதப்பட்டு வெளிவருகின்றன. இன்னும் அச்சில்வராத சில பழைய அருந் தமிழ் நூல்களும் வைத்தியர் பிறர் அறியாவண்ணம் மறைத்து வைத்துச் சிகிச்சை செய்துவரும் முறைகள் அடங்கிய சிறந்த தமிழ் வைத்திய (இதுவரையும் வெளிவராத வாகடங்களும் இதன்கண் தொடர்ச்சியாய் வெளிவருமாதலின் தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் உடனே இப்பத்திரிகையைப் பெற்றுப் படித்தல்வேண்டும். இப்பத்திரிகை மூன்று ஆண்டுகளாக நடந்துவருகின்றது

நாளுக்குநாள் பத்திரிகை அனுப்பும்படி எழுதுவோர் தொகை அதிகப்படுதலின் பழைய இதழ்கள் பெற்றுக்கொள்வது அரிது. உடனே எழுதுங்கள்.

வருட மொன்றுக்கு ரூபா 2—00.
மலாயநாடு டலர் 2—00.

விலாசம்:—கலைமகள் நிலையம்,
மானிப்பாய்,
யாழ்ப்பாணம்.

## ஆசாரம்.

(ஆலயம் என்னும் நூலிலிருந்து எடுக்கப்பட்டது)

எவ்வித ஆசாரத்துடன் ஆலயவழிபாட்டிற்கு செல்ல வேண்டுமென்பலதப்பற்றி ஆராயவாம். ஆசாரமென்பது தூய்மை அல்லது பரிசுத்தம். யாவரும் நீராடி தோய்த்துலர்ந்த ஆடைதரித்து திருநீறு அணிந்து தூயமனத்தராய் ஆலயவழிபாட்டிற்குச் செல்லவேண்டும். நாம் பிறந்த சைவசமயமே ஆசாரத்தை நன்கு விளக்குகின்றது சைவம் அல்லது சிவகாருண்ணியமே நமது சமயம். சிவத்தை வணங்கும் மதமே சைவசமயமெனப்படும் சிவம் என்பது கருணையே-அன்பே-அருளே வடிவமாயுள்ளது ……………திருநீறு சிவசின்னங்களில் ஒன்று கடவுளைச் சிந்திப்பதற்கு திருநீறு ஓர் விசேஷ சாதனமாகும். அது அணிவோரது ஆசாரத்தையும் மனத்தூய்மையையும் வெளித் தோற்றத்திற் காட்டும் ஓர் குறியாகும் அதன் மகத்துவத்தை மந்திரமாவது நீறு என்னும் அடியாகவுள்ள திருநீற்றுப்பதிகத்தைப் படித்து அறிந்துகொள்ளலாம். திருநீறு அணிந்து தாம் மனத்தூய்மை உடையோமென்று பெரும்பான்மையோர் பாசாங்கு செய்கிறார்கள் அந்தோ! அவர்கள் பேதமை என்னே! தீய எண்ணங்களையும் தீய செய்கைகளையும் விடுத்துச் சிவசின்னத்திற்கு இழுக்குறுவண்ணம் நற்குண நற்செய்கையுள்ளவர்களாக வாழ்தலன்றோ முறையாகும்

"கந்தைத் துணியானாலும் கசக்கிக்கட்டு' என்னும் முதுமொழியும் சுத்ததன்மையை வற்புறுத்துகின்றது. தற்காலத்து ஆண் பெண் இருபாலரும் அழகிய ஆடை ஆபரணங்களைத் தரித்து ஆடம்பரத்துடன் ஆலயவழிபாட்டிற்குச் செல்கின்றனர் இவ்வித ஆடம்பரங்கள் ஆசாபாசத்திற்கு ஆதாரமானவைகளே ஆலயங்களுக்கு ஆசாபாசங்களை அடக்கி அரனை அன்புடன் வழிபடுதற்கன்றோ செல்கின்றோம் அவ்வித ஆசாபாசமற்ற அன்புவழிபாட்டிற்குத் தோய்த்துலர்ந்த சாதாரண உடையன்றோ அன்பை ஊட்டும் ஆசார உடையாகும்.

ஆபரணங்களால் மாந்தர் அடையும் அல்லலோ அளவிடற்பாலது நம் சகோதரிகளைப் பிடித்த நகைப் பைத்தியம் கோவிலுக்கென்று கும்பிடவும் விடாது தடுக்கின்றது. அப்பைத்தியம் ஏழைகள், தனவந்தர், கற்றோர், கல்லாதார் என்னும் யாவரிடையும் தாண்டவம் புரிகின்றது கோவிலுக்குச் செல்வதற்கு நகையில்லையேயென்று வருந்துவோர் எத்தனைபேர்; நகை இரவல் வாங்க இடுக்கண் உறுவோர் எத்தனைபேர்; அந்தோ எண்ணிக்கையுண்டோ? சகோதரிகளே! இந்நகைகள் கடவுள் வழிபாட்டிற்கு உங்களுக்கு எவ்விதத்திலும் துணைபுரிகின்றதா என்பதைப் பற்றிச் சிந்தித்துப் பார்த்தீர்களா? விலையுயர்ந்த ஆபரணங்களை அணிந்து செல்லும் மாதர்கள் தாங்கள் மதியிழந்து போற்றும் பொன்னணியையும் கல்லணியையும் எங்கு இழந்து விடுவோமோ அல்லது எங்கு அவைகள் களவாடப்பட்டு விடுமோ என்று எண்ணித் தங்கள் இல்லம் திரும்பிவந்து சேரும் வரைக்கும் மனக்கிலேசத்துடன் இருக்கிறார்கள். அன்றியும் அவர்களது மனம் அந்நகைகளின் மதிப்பிற்பதிகின்றது. அவ்விதமான அமைதியின்மைக்கிடையில் கடவுள் வழிபாட்டிற்கு எங்கு இடமுண்டு கல்வியறிவில்லாமையும் கற்றவர்மாட்டு ஆன்மஞானக் கல்வியில்லாமையுமே இவ்வித மயக்கங்களுக்குக் காரணமாகும்.

"கற்றோர்க்குக் கல்வி நலனே கலனல்லால்
மற்றோர் அணிகலம் வேண்டாவாம்''

"கற்புடுத்து அன்புமுடித்து நாண்மெய்ப் பூசி
நற்குண நற்செய்கை பூண்டாட்கு''

என்னும் நீதிநெறிவிளக்கம் இங்கு நோக்கற்பாலதே. அழகிய ஆபரணம் எவையென்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்குகின்றதல்லவா? கற்பாகிய உடையை உடுத்து அன்பாகிய மலரைச்சூட்டி நாணமென்னும் கலவைச்சாந்தை (சவுக்காரமும் புசல்மாவுமல்ல) உடம்பிற்பூசிக்கொண்டு நற்குண நற்செய்கையும் ஆகிய ஆபரணங்களையே (பவுணாலும் கற்களாலும்செய்த பாரமாகிய ஆபரணங்கள் அல்ல) அணியவேண்டியதாம்.

சகோதரிகளே! சகோதரர்களே!

ஆகையால் எவ்வித ஆபரணமான ஆடை ஆபரணங்களையும் அணிந்துகொள்ளாது சுத்தமான சாதாரண உடையுடன் உள்ளும்புறம்பும் ஆசாரமுடையோராய்ப் பரிசுத்த மனத்துடன் ஆலய வழிபாட்டிற்குச் செல்லுதல் வேண்டும். (வரும்)

## குணமாமணி.

### 1-ம் அத்தியாயம்

செந்தமிழ்ச் செழிப்பும் வனப்பும் நிறைந்தோங்கிய யாழ்ப்பாண வடகுடா நாட்டின் கீழ்ப்புறத்தின் சிற்றூர்க் கிராமத்திலுள்ள வடவீதியின் வடபாகம் விளங்காநின்ற பார்வதியென அழைக்கப்படும் ஓர் அழகிய கட்டிடத்தின் நடு அறையின் பாகத்தில் இக்கதை ஆரம்பமாகிறது.

அறையின் சுவர்கள் பளபளப்பாயிருந்தன அவ்விடத்தில் இரு பவர் லயிட்டுகள் பிரகாசித்துக்கொண்டிருந்தன, சித்திரப் படங்கள் சுவரில் மாட்டியிருந்தன, அங்கு பார்ப்பவர்கள் வியக்கத்தக்க மஞ்சமொன்று போடப்பட்டிருந்தன. அம்மஞ்சத்தின்மீது பூரண சந்திரனைப் பழிக்கும் முகமும், சேலைப் பழித்த விழிகளும், மூன்றாம் பிறைபோன்ற நெற்றியும், பவளத்தை நிகர்த்த இதழ்களும், முத்துக்கள் போன்ற பற்களும், பாதம் வரையிலும் வீழக்கூடிய கருமைபொருந்திய நீண்ட கூந்தலையுடைய 16 வயதுடைய பெண் ஒருத்தி; சாளரத்தின் வழியாக அதிக நட்புக்குரிய யாரையோ பார்ப்பவள்போல் அங்குமிங்கும் பார்த்துக்கொண்டிருக்கையில் பின்புறக் கதவில் யாரோ தட தடவெனத் தட்டும் தொனியைக்கேட்டு அந்தோ தெய்வமே நாம் எத்தகையான பழிக்குள் மூழ்கவேண்டியிருக்கின்றதோ வென ஆற்றாத் துயரத்தை ஒருவாறு சரிப்பண்ணிக்கொண்டு மெல்லெனக் கதவைத் திறந்து பார்க்கையில் ஆரும் அங்கு தென்படவில்லை. கதவைப் பழையபடி பூட்டிக்கொண்டு முன்னிருந்த அறையின் சாளரத்தின் பாகத்தே பெருமூச்சுடன் அமர்ந்தாள். நாமிதுவரையும் பெண்ணின் பெயரைச் சொல்லாததற்கு மன்னிக்கவும் உடனே வாசலில் கார் ஒன்று வந்து நின்றதும் அதினின்று சுமார் 50 வயசு உள்ள கெம்பீரமான ஆடவன் ஒருவன் இறங்கினதும் நமது குணமாமணி சென்று மிக வணக்கத்துடன் கைலாகு கொடுத்து அறையின் உள்ளே இருவரும் சென்றதும் குசு, குசு வென யாதோ பேசினதும் உடனே வெளியேவந்து ஆடவன் காரில் ஏறினதும் வியப்பாயிருந்தது. ஏனென்றாலோ முன்னிலும் கவலைகூடிய முகத்துடனே குணமாமணி தோற்றப்பட்டாள். இது இப்படியிருக்க இங்கு நடக்கும் விஷயங்களைக் கவனிப்போம்.

பச்சைமைபூசிய அழகிய சொக்கினிற் கார் ஒன்று குணமாமணியின் வீட்டு வாசலில் வந்ததும அதினின்று இரு சட்டைதொப்பிக் காரர்கள் குதித்ததும் அறையின் உட்புறத்தே அதிக ஆவலோடு சென்றும் பார்ப்பவர்களுக்கு அதிக பயத்தைத் தரக்கூடிய விதமாக இருந்தது சட்டைக்காரர்கள் இருபேரும அறையின் உட்புறம் வெளிப்புறம் நாடாக்கொண்டு அழந்து வரிசைவரிசையாகக் குறித்தார்கள். விசேஷமாக விருந்தை அறையொன்றை திருப்பித் திருப்பிச் சோதித்ததுடன் அளந்தளந்துங் குறித்தார்கள். கடைசியாக குணமாமணியை நோக்கி உனது பெயரென்ன என்று கேட்டார்கள்.

அப்பொழுது தன்னுடைய பெயர் குணமாமணி வீட்டின் பெயர் பார்வதி யென்று சொன்னதும்,

திரும்பவும் சட்டைக்காறர் குணமாமணியை நோக்கி உனது புருஷன்பெயரென்ன? எனவும்

சதாசிவம்பிள்ளை யெனக் குணமாமணி சொல்லுவதற் கிடையில் மற்றொரு அழகியகாரில்நின்றும் இருவர் அதிக அவசரத்தோடும் இறங்கினார்கள்.

## இவர்களுடைய இலக்கு.

சென்றமீ 16வ யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிமண்டபத்தில் தாழ்த்தப்பட்டவர்களின் நன்மையை நாடி உழைப்பவர்களின் கூட்டமொன்று நடைபெற்றது. அங்கு கூடியிருந்தோரிலனேகர் தாழ்த்தப்பட்ட வகுப்பினர்கள். பிரசாரகர்கள் சிலர் ஆங்கிலத்திலும் சிலர் தமிழிலும் பேசினர். தமிழ்மாத்திரம் விளங்கக் கூடியவர்களுக்கு ஆங்கிலத்திற் பேசிய விஷயங்கள் விளங்கவில்லை.

இக்கூட்டம் சமையபேதமின்றிக் கூடப்பட்டது மகிழற்பாலது. முன்னொருபோது சமையபேதமின்றி சுன்னாகத்தில் தாழ்த்தப்பட்டவர்களுக்கிடையே ஓர் சங்கம் கூடியபோது கத்தோலிக்க குருவொருவர் தமது மதத்தவர்கள் பிறசமயிகளுடன் கலத்தலும் சேர்ந்துழைத்தலும் ஆகாதென்றும் அவர்களுடைய முன்னேற்றத்திற்கும் உயர்ச்சிக்கும் ஆகவேண்டியவற்றைத்தாமே புரிவோமென்றுங் கூறி அவர்க்கெனத் தனியே ஓர் சங்கமும் கூட்டிவைத்தனர். அவர் திருவாக்குக்குட்பட்டொழுகும் சிலர் இப்பொழுது சைவசமயத்தவர்களுடன் கலந்து உழைக்கமுன் வந்திருப்பதைக் குறித்து நினைக்க வேண்டியதென்ன? இது குருவானவரின் சூழ்ச்சியென்று இப்போது அவர் தமது சிஷரைக் கண்டியாமையால் நன்கு புலப்படும் இவை யெல்லவற்றையும் நாம் நல்லாய் ஆலோசித்து நயவஞ்சக முள்ளவர்களுடன் ஒத்துழையாது விடுதலே நன்று. அவர்கள் நம்மை முன்னேற்ற விரும்புதல்'' ஆடு நனைகிறதென்று ஓநாயழுகிறதுபோல விருக்கிறது. அவர்கள் குறிப்பிடுகிற வகையில் சைவராயுள்ளவர்களே தாழ்த்தப்பட்டவரென்றும் தாம் முன்னேற்ற மடைந்தவர்களென்றும் குறிப்பாய்க் கிடக்கின்றது. நண்பர்களே இவர்கள் எப்போதாவது ஒத்துழைக்க வருவார்களா வென்பதைச் சிந்தியுங்கள்.

இங்ஙனம்,
ஓர் தாழ்த்தப்பட்டோன்.

## பதிவிரதை.

ஸ்ரீமான் சுப்பிரமணிய பாரதியார் எழுதியது

இந்தக் காலத்தில் பல பொய்கள் இடறிப் போகின்றன. பல பழைய கொள்கைகள் தவிடுபொடியாகச் சிதறுகின்றன பல அநீதிகள் உடைபடுகின்றன. பல அநியாயக்காரர்கள் பாதாளத்தில் விழுகின்றார்கள்

இந்தக்காலத்தில் நாம் யாருக்கும் பயந்து நாம் நமக்குத் தோன்றுகிற உண்மைகளை மறைக்கக்கூடாது. பத்திரிகைகள்தான் இப்பொழுது உண்மை சொல்லச் சரியான கருவி பத்திராதிபர்கள் இந்தக் காலத்தில் உண்மைக்குப் புகலிடமமாக விளங்குகிறார்கள்.

ஸ்திரீகள் பதிவிரதைகளாக இருக்க வேண்டும் என்று எல்லோரும் விரும்புகிறார்கள் அதிலே கஷ்டம் என்னவென்றால் ஆண்பிள்ளைகள் யோக்கியர்களில்லை; ஆண்மக்களில் ஒவ்வொருவனும் தன் மனைவி மக்கள் பதிவிரதைகளாக இருக்க வேண்டும் என்பதில் எத்தனை ஆவலோ டிருக்கின்றானோ, அத்தனை ஆவல் இதர ஸ்திரீகளின் பதிவிரதத்யத்திலே காட்டுவதில்லை ஒவ்வொருவனும் ஏறக்குறையத் தன் இனத்து ஸ்திரீகளைப் பதிவிரதையென்று நம்புகிறான்.

ஆணும் பெண்ணும் ஒன்றுக்கொன்று உண்மையாக இருந்தால் நன்மை உண்டாகும். பதிவிரதைக்கு அதிக வீரமும் சக்தியும் உண்டு ஸாவித்ரி தனது கணவனை யமன் கையிலிருந்து மீட்ட கதையில் உண்மைப் பொருள் பொதிந்திருக்கிறது

ஆனால் பதிவிரதை யில்லை என்பதற்காக ஒரு ஸ்திரீயை வதைத்து இம்சைபண்ணி, அடித்து, ஜாதிபைவிட்டுத் தள்ளி, ஊரார் இழிவாக நடத்தி அவளுடன் யாரும் பேசாமல் கொள்ளாமல் தாழ்வு படுத்தி, அவளைத் தெருவிலே சாகும்படி விடுதல் அநியாயத்திலும் அநியாயம்.

அட பரம மூடர்களா! ஆண்பிள்ளைகள் தவறினால் ஸ்திரீகள் எப்படிப் பதிவிரதையாக இருக்க முடியும்? கற்பனைக் கணக்குப் போட்டுப் பார்ப்போம். ஒரு பட்டணத்தில் லட்சம் ஜனங்கள்; ஐம்பதினாயிரம்பேர் ஆண்கள்; ஐம்பதினாயிரம்பேர் பெண்கள்; அதில் நாற்பத்தையாயிரம்பேர் பர ஸ்திரீகளை இச்சிப்பதாக வைத்துக்கொள்வோம் அதிலிருந்து குறைந்த பக்ஷம் நாற்பத்தையாயிரம் ஸ்திரீகள் பரபுருஷரின் இச்சைக்கு இடமாகவேண்டும். இந்தக் கூட்டத்தில் நாற்பதினாயிரம் புருஷர் தம் இச்சையை ஓரளவு நிறைவேற்றுவதாக வைத்துக் கொள்வோம் எனவே குறைந்தபட்சம் இருபதினாயிரம் ஸ்திரீகள் விபசாரிகளாக இருத்தல் அவசியமாகிறது. அந்த இருபதினாயிரம் விபசாரிகளில் நூறுபேர்கள்தான் தள்ளப்படுகிறார்கள். மற்றவர்கள் புருஷருடன் வாழ்கிறார்கள். ஆனால் அவளவளுடைய புருஷனுக்கு மாத்திரம் விபசாரி யென்பது நிச்சயமாகத் தெரியாது தெரிந்தும் பாதகமில்லையென்று சும்மா இருப்பாரும் உளர்.

ஆகவே பெரும்பாலோர் விபசாரிகளுடனே தான் வாழ்கிறார்கள் இதனிடையே பதிவிரதயத்தைக் காப்பாற்றும் பொருட்டாக ஸ்திரீகளைப் புருஷர்கள் அடிப்பதும், திட்டுவதும் கொடுமை செய்வதும் எல்லையின்றி நடைபெற்று வருகின்றன

அதென்னடா அது? "என்மேல் நீ ஏன் விருப்பஞ் செலுத்தவில்லை" என்று ஸ்திரீயை அடிப்பதற்கு அர்த்தமென்ன? அதைப்போல் மூடத்தனம் மூன்று லோகங்களிலும் வேறே இடையாது.

ஒரு வஸ்து நம்முடைய கண்ணுக்கு இன்பமாக இருந்தால், அதனிடத்தில் நமக்கு விருப்பம் இயற்கையிலேயே உண்டாகிறது. கிளியைப்பார்த்தால் மனிதர் அழகென்று நினைக்கிறார்கள். தவளை அழகில்லையென்று மனிதர்கள் நினைக்கிறார்கள். இதற்காகத் தவளைகள் மனிதரை அடித்தும் திட்டியும் சிறையிலே போட்டும் துன்பப்படுத்த அவற்றிற்கு வலிமை யிருப்பதாக வைத்துக்கொள்வோம். அப்படி அவை செய்தால் நாம் நியாயம் என்று சொல்வோமா?

சில தேசங்களில் அன்னியர் வந்து கொடுங்கோல் அரசு செலுத்துகிறார்கள். அவர்களிடம் அந்த ஜனங்கள் ராஜபக்தி செலுத்த வேண்டுமென்றும், அங்ஙனம் பக்தி செய்யாவிட்டால், சிறைச்சாலையிலேயே போடுவோம் என்றும் சொல்லுகிறார்கள். எப்படிப்பட்ட ராஜ்யத்தை உலகத்து நீதிமான்கள் மிகவும் அவமதிக்கிறார்கள்.

அந்த அரசு போலவேதான் ஸ்திரீகள்மீது புருஷர்கள் செய்யும் கட்டாய ஆட்சியும் என்பது யாவர்க்கும் உள்ளங்கை நெல்லிக்கனி போலத் தெளிவாய் விளங்கும். கட்டாயப்படுத்தி "என்னிடம் அன்புசெய்" என்று சொல்வது பெரிய அவமானமல்லவா?

ஸ்திரீகள் புருஷரிடம் அன்புடன் இருக்க வேண்டினால், புருஷர் ஸ்திரீகளிடம் அசையாத பக்தி செலுத்த வேண்டும். பக்தியே பக்தியை விளைக்கும் நம்மைப் போன்றதொரு ஆத்மா நமக்கு அச்சத்தினாலே அடிமைப்பட்டிருக்கும் என்று நினைப்பவன் அரசனாயினும் குருவாயினும் புருஷனாயினும் மூடனைத்தவிர வேறில்லை அவனுடைய நீசத்தனம் ருஜுவாகுமேயொழிய, அவனுடைய நோக்கம் நிறைவேறாது. அச்சத்தினால் மனுஷ்ய ஆத்மா வெளிக்கு அடிமைபோலவே நடித்தாலும், உள்ளே துரோகத்தை வைத்துக்கொண்டே தானிருக்கும் அச்சத்தினால் அன்பை விளைவிக்க முடியாது

ஸ்திரீகள் மனுஷ்ய ஆத்மா இல்லாதவர்கள் என்ற நினைப்பு ஆண்களுக் கில்லாவிடினும், ஆண்களில் பெரும்பாலோர் ஸ்திரீகளை மிருகங்களைப்போல தான் நடத்துகிறார்கள் இதை ஸ்திரீகள் தயாள குணத்தால் பொறுத்துக் கொண்டிருக்கிறார்கள் இதை அறியாமல் ஸ்திரீகள் சரீர பலக் குறைவால் பொறுத்துக் கொண்டிருப்பதாகப் பல மூடப் புருஷர்கள் நினைக்கிறார்கள். சரீர பலம் குறைந்தாலும், ஸ்திரீகள் சோற்றிலே விஷத்தைக் கலந்து போடக் கூடாதா? ஏன் போடவில்லை? சரீர பலக்குறைவினாலன்று;--தயாள குணத்தால்

ஸ்திரீகளுக்குத் தயாளகுணம் அதிகம் அவர்களாலே தான் மனுஷ்ய நாகரிகம் உற்பத்தியாயிற்று. அவர்களிடம் ஆண்மக்கள் நன்றிகெட்ட விதமாக நடந்து கொண்டு வருகிறார்கள் இதனால் உலகத்தில் கலியை அழிப்பது சிரமமாகின்றது பெண்ணுக்கு ஆண் செய்யும் அநியாயமே முதல் அநியாயம் இதை ஒழிக்க பிறகு தான் கலியுகம் போய்க் கிருதயுகம் பிறக்க ஹேது உண்டாகும்

"லோகோபகாரி"

## பெண்கள் நிலை.

(திரு பா. லக்ஷ்மி எழுதியது.)

நம் சகோதரிகள் யாவரும் அன்பு சத்தியம் தர்மம் ஒழுங்கு முதலிய நற்குணங்கள் அமையப் பெற்று தங்களிடத்தில் தாங்கள் நம்பிக்கையுடையவர்களாக இருத்தல் வேண்டும்.

உண்மைக்கு யாரும் அஞ்ச வேண்டியதில்லை. ஆதலால் குடும்பங்களில் நேரிடும் துன்பங்களில் சத்தியப் போர் செய்து ஜயித்து வருவீர்களாக அனேக குடும்பங்களில் குருட்டு எண்ணங்களால் ஸ்திரீகளைச் சந்தேகித்து உட்பகை கொண்டு புகைந்து கொண்டும் வெளித் தோற்றத்தில் மிக்க அழகுடனும் உண்மைக்கு மாறாகக் காணப்பட்டு வருகிறது அக் குடும்பங்களில் ஸ்திரீகள் படும் துன்பங்களும் அவர்கள் விடும் கண்ணீரும் அளவில்லை சிலர் தைரியமில்லாமல் உயிர் துறக்கவும் நேரிடுகிறது. இப்படிச் சந்தேகச் சாமிகள் விவாகம் செய்துகொண்டு குடும்பம் நடக்கத் தெரியாமல் தங்கள் மனதிற்கும் நிம்மதியற்று வீணாக ஸ்திரீகளை உயிருடன் வதைப்பதை விட்டு விவாகத்தை மறந்திருப்பது நம் தேசத்திற்கு மிக்க நன்மை புரிவதாகும்

ஒவ்வொரு குடும்பத்திலும் ஸ்திரீகள் படும் துன்பங்களை நினைக்கில் உள்ளம் கொதிக்கின்றது அவர்கள் விடும் கண்ணீர்களைத் துடைத்து ஆறுதல் சொல்ல அவரவர் கணவரால் முடியுமே யல்லாது மற்றெவராலும் முடியாது. சகல சந்தோஷங்களையும் சௌக்கியங்களையும் ஸ்திரீகள் புருஷரால் தான் அடையமுடியுமே யல்லாது தெய்வத்தினாலும் அடைய முடியாதெனில் புருஷனிடத்தில் எவ்வளவு பக்தியும் நம்பிக்கையும் வைத்திருக்கிறார்களென்று நம் சகோதரர்கள் ஊகித்தறிந்து அவர்களைச் சரிவர நம்பிக்கையுடன் நடத்தும்படி வேண்டிக் கேட்டுக் கொள்ளுகிறேன்

சகோதரர்களே ஸ்திரீகள் உங்களிடத்தில் அடைக்கலம் புகுந்ததாக அறிவீராகில் அவர்களைத் துன்புறுத்தாமல் ஆதரித்து வருவதே உங்கள் கடமையாகும் அல்லது உங்கள் உயிர்த் துணைவியென உண்மையை அறிந்து கொள்வீராகில் இருவரும் சம உரிமை பெற்று சந்தோஷமாக உங்கள் இல்லத்தை ஸ்வர்க்கமாகச் செய்து கொண்டு வாழ்வீர்களாக, அதை விட்டு ஸ்திரீகளைத் துன்புறுத்துவதோ அவர்களைக் கேவலமாக வைத்திருப்பதோ நினைப்பதோ தகாததாகும். ஸ்திரீகள் அதி பால்யத்தில் மிக்க சிறுமிகளாக இருக்கும் போதே உங்களிடத்தில் தாய் தகப்பனார் அனுப்பி விடுகிறார்கள் அவர்களைச் சிறியவயதிலிருந்து நீங்களே நடத்துகிறவர்களாகிறீர்கள் அவர்கள் மேன்மை பெறுவதும் தாழ்மைப் படுவதும் புருஷனாலேயே அல்லாது அவர்களால் அல்ல சகல குற்றங்களுக்கும் பெருமைகளுக்கும் புருஷனே பொறுப்பாளியாவார்.

புருஷனும் மனைவியும் அன்பும் ஆசாவும் பெற்று உடலும் உயிருமாக இருந்து கொண்டு ஏதோ ஒரு கால வித்தியாசத்தினால் இருவரும் பிரிந்திருக்க நேரிடும்போது அவர்கள் உள்ளம் கொதிப்பதை ஈசன் ஒருவரே அறிவார். அவர்கள் உண்மை நிலைமையை அறியாத ஜனசமுகம் நிரபராதியான ஸ்திரீயின் மேல் இல்லாப் பழிகளைச் சுமத்தி அப்பரிதாப நிலையில் படுகுழியில் ஆழ்த்தி விடுகிறது புருஷன் உயிருடன் இருக்கும் போது அவன் முட்டாள் தனத்தினால் ஸ்திரீயை விலக்கி விட்டு அனாதையாகச் செய்வதைக் காட்டிலும் உயிருடன் ஓர் காட்டில் விட்டு விடுவானாகில் கரடி, புலிகள் தின்று பசியேனும் ஆறும். அந்தோ என்ன பரிதாப நிலை ஸ்திரீகளைக் கொடுமையாக நடத்துபவரும் கேவலமாக நினைப்பவரும் கடவுளா? அல்லது மனிதனா?

சகோதரிகளே! நம்மிடத்தில் நாம் நம்பிக்கையுடனும் உறுதியுடனும் இருக்க வேண்டுமே யல்லாது ஒருவருக்காக நாம் எதையும் செய்தலென்பது கூடாது

மகா லக்ஷ்மியாகிய சீதா பிராட்டியாரும் ஸ்ரீராமனைப் பிரிந்திருந்ததால் தான் ஒரு வண்ணானால் பழிச் சொற்களைக் கேட்கும்படி நேர்ந்தது. மறுபடி காட்டிற் கேகும்படி நேர்ந்ததும் அதனாலேயே தான் பூமியில் ஜனிக்கும்போதே பாட்டிகள் பெண்ணோ..............என்று இழந்து விடுகிறார்கள். இவையெல்லாம் தெரிந்து தான் சகல கஷ்ட நிஷ்டூரங்களை சகித்துக் கொண்டும் புருஷன் வீடே கதியெனவும் அதுவும் முடியாவிடில் உயிரை துறக்கிறார்கள் இக்குற்றங்களை உணர்ந்து சகோதரர்கள் யாவரும் தங்கள் மனைவியை உயிர்த் துணைவி என்பதை நன்கு உணர்ந்து நல்வாழ்வு வாழ்ந்து இன்புறுமாறு பிரார்த்திக்கிறேன்

லோகோபகாரி.

## காந்தி சரித்திரம்:

மகாத்மா காந்தி "நவஜீவன் பத்திரிகையில் தொடர்ச்சியாக எழுதி வரும தமது வரலாறில் 4-வது அதிகாரம், 2-வது அத்தியாயம் வருமாறு:—

புதிய ஆசியாக்காரர்கள் இலாகாவின் தலைமை அதிகாரிகளுக்கு நான் என் டிரான்ஸ்வாலுக்கு வந்திருக்கிறேனென்று புலப்படவில்லை அவர்களிடம் அடிக்கடிபோய்க் கொண்டிருந்த இந்தியர்களை அவர்கள் கேட்டுப்பார்த்தார்கள். அவர்கள் நிச்சயமாக ஒன்றும் சொல்ல முடியவில்லை பழைய சம்பந்தத்தை வைத்துக்கொண்டு, அனுமதிச் சீட்டில்லாமல் வந்திருந்தால் என்னைக் கைதிசெய்துவிடலாமென்றும் அவர்கள் நினைத்தார்கள்.

ஒரு பெரிய யுத்தம் முடிந்ததும் சிறிதுகாலத்திற்கு கவர்ன்மெண்டுக்கு விசேஷ அதிகாரத்தைக் கொடுத்து வைப்பது எங்கும் வழக்கம் தென்னாபிரிக்கா கவர்ன்மெண்டுக்கும் இவ்விதம் விசேஷ அதிகாரம் கொடுக்கப்பட்டிருந்தது. அனுமதிச்சீட்டில்லாமல் டிரான்ஸ்வாலுக்கு வருகிறவர்களைக் கைதிசெய்து தண்டிக்கலாமென்று ஒரு சமாதானப் பாதுகாப்புச் சட்டத்தை கவர்ன்மெண்டார் இயற்றி யிருந்தார்கள் இந்தப் பிரிவின்படி என்னைக் கைதிசெய்யலாமா வென்றும் யோசனை நடந்தது. ஆனால் அனுமதிச் சீட்டை ஆஜர்ப் படுத்தும்படி என்னைக்கேட்க ஒருவருக்கும் தைரியம்வரவில்லை.

இருந்தாலும் அதிகாரிகள் டர்பானுக்குத் தந்தி கொடுத்துக்கேட்டார்கள். நான் அனுமதிச் சீட்டுடன் வந்திருப்பதாகக் கேள்விப்பட்டதும் அவர்களுக்கு தடுமாற்றம் ஏற்பட்டு விட்டது இருந்தாலும், அத்தகைய தடுமாற்றத்தினால் அவர்கள் அதைரிய மடைந்து விடுகிறவர்களன்று நான் டிரான்ஸ்வாலுக்குள் வந்து விட்டபோதிலும், மிஸ்டர் சேம்பர்லேனை நான் பார்க்கமுடியாமல் அவர்கள் செய்து விடலாமன்றோ.

அது கோஷ்டியில் யார் யார் இருக்கப்போகிறார்களென்று அதிகாரிகள் இந்திய சமூகத்தினரைக் கேட்டுவிட்டார்கள் தென்னாபிரிக்காவெங்கும் நிறத்துவேசம் இருந்துவந்தது இருந்தாலும் இந்தியாவிலிருந்து வருவதுபோல் இத்துவேஷம் அவ்வளவு ஆதாரமான வழியில் இருந்து வருமென்று நான் எதிர்பார்க்கவில்லை தென்னாபிரிக்காவில் கவர்ன்மெண்டு இலாகாக்கள் பொது ஜனங்களுடைய அனுகூலத்திற்காக ஏற்பட்டிருக்கின்றன; பொது ஜனங்களுடைய அபிப்பிராயத்திற்கு அந்த இலாகாக்கள் கட்டுப்பட்டவை ஆகையால் அந்த இலாகாக்களின் தலைவர்களும மரியாதையும் அடக்கமும் உடையவர்களாயிருந்தார்கள் வெள்ளையர்களல்லாதவர்களுக்கும் அதனால் அனுகூலமிருந்து வந்தது. ஆசியாவிலிருந்து அதிகாரிகள் வந்தது முதல் எதேச்சாதிகாரமும், ஆசியாவில் அவர்கள் கற்றுக்கொண்டவழிகளும இங்கும் தலையெடுக்க ஆரம்பித்துவிட்டன தென்னாபிரிக்காவில் ஒருவித ஜவாப்தாரியான ஆட்சி அல்லது ஜன நாயக ஆட்சி இருந்து வந்தது ஆனால் ஆசியாவிலிருந்து வந்த அதிகாரிகள் எதேச்சாதிகார முறைகளில் முழுகியவர்களாக இருந்தார்கள். ஆசியாவில் ஜவாப்தாரியான ஆட்சி கிடையாது அங்கு அன்னியர் ஆட்சி நடந்து; தென்னாபிரிக்காவில் ஐரோப்பியர்கள் குடியேறியவர்கள அவர்கள் தென்னாபிரிக்கா பிரஜைகளாகிவிட்டதால், அதிகாரிகளிடத்தில் அவர்களுக்குச் செல்வாக்கு இருந்து வந்தது இந்த சந்தர்ப்பத்தில் ஆசியாவிலிருந்து எதேச்சாதிகாரிகள் வந்து சேர்ந்தனர். இந்தியர்கள் பாடு திண்டாட்டமாகிவிட்டது. இந்த எதேச்சாதிகாரத்தின் பலனை நானும் அனுபவிக்க வேண்டியதாயிற்று. இந்த இலாகாவின் தலைவராக வந்திருந்த சிலோன் அதிகாரி ஒருவரைப் பார்க்கும்படி எனக்கு அழைப்பு வந்தது எழுத்து மூலமாக ஒன்றும் வரவில்லை. ஆசியாக்காரர் இலாகா உத்தியோகஸ்தர்களை இந்தியர்கள் அடிக்கடி பார்க்க வேண்டியிருந்தது. சேத் டிபாய்ஹாஜிகான் முகமது என்பவர் என்னுடன் அவர்களைப் பார்க்கச் சென்றுகொண்டிருந்தவர்களில் ஒருவர் நான் யாரென்றும், எதற்காக அங்கு வந்திருக்கிறேனென்றும அதிகாரி அவரைக் கேட்டார்.

"அவர் எங்களுக்கு யோசனை சொல்லுகிறவர் எங்களுடைய வேண்டுகோளின் மேல் இங்கு வந்திருக்கிறார்" என்று அவர் பதிலளித்தார்.

"நாங்கள் எதற்காக இங்கு இருக்கிறோம். உங்களைப் பாதுகாப்பதற்காக எங்களை நியமித்திருக்க வில்லையா? இவ்விடத்து நிலைமை காந்திக்கு எவ்விதம் தெரியும்?" என்று அந்த அதிகாரி கேட்டார்.

அதற்கு எவ்விதமோ சேத் பதில் சொல்லி விட்டார். 'நீங்கள் இருப்பது வாஸ்தவமே, ஆனால் காந்தி எங்கள் மனிதர் அவருக்கு எங்களுடைய பாஷை தெரியும் எங்களுடைய கஷ்டங்கள் தெரியும். என்ன இருந்தாலும் நீங்கள்! உத்தியோகஸ்தர் தானே" என்று அவர் சொன்னார்.

அந்த அதிகாரி உடனே என்னை அழைத்து வரும்படி அவருக்குக் கட்டளையிட்டார் அவருடனும், இதரர்களுடனும் நான் அந்த அதிகாரியிடம் போனேன். அவர் எங்களை உட்காரச் சொல்லவில்லை. நாங்கள் நின்று கொண்டிருந்தோம்.

அந்த அதிகாரி என்னைப் பார்த்து "எதற்காக இங்கு வந்தீர்?" என்று என்னைக் கேட்டார்.

என்னுடைய இந்தியசகோதரர்களின் வேண்டுகோளின் மேல் அவர்களுக்கு யோசனை சொல்லுவதற்காக நான் இங்கு வந்திருக்கிறேன்" என்று பதிலளித்தேன.

"உங்களுக்கு இங்கு வர உரிமையில்லையென்பது தெரியாதா? தவறுதலாக உங்களுக்கு அனுமதிச்சீட்டு கொடுக்கப்பட்டு விட்டது. இங்கு ஸ்திரவாசம் செய்து வரும இந்தியராக உங்களைப் பாவிக்க முடியாது நீங்கள் திரும்பிப் போய்விட வேண்டும் மிஸ்டர் சேம்பர்லேனை நீர் பார்க்க முடியாது. இந்தியர்களுடைய பாது காப்புக்குததான் ஆசியாக்காரர் இலாகா ஏற்பட்டிருக்கின்றது. நல்லது நீங்கள் போகலாம்" என்று சொல்லி, நான் பதில் சொல்ல இடங் கொடுக்காமல் என்னை அனுப்பிவிட்டார், மற்றவர்களை மட்டில் அவர் வைத்துக்கொண்டு, என்னைத் தருவித்ததற்காக அவர்களைக் கண்டித்து, என்னைத் திருப்பி அனுப்பி விடும்படி உபதேசம் செய்தனுப்பினார்.

அவர்கள் பயந்து கொண்டு வந்து சேர்ந்தனர். எதிர் பாராத தொல்லை இப்பொழுது எங்களுக்கு ஏற்பட்டு விட்டது.


## விசேஷ அறிவிப்பு.

பியானோ, லில்லிபுளூட், பிடில், ஆர்மோனியம், கிரமபோன் முதலிய சகல வாத்தியங்களும், கடிகாரங்களும் திருத்திக் கொடுக்கப்படும். மேற்கூறிய கருவிகளுக்கும் தேவையான எந்தச் சாமான்களும் விலைக்கும் பெற்றுக்கொள்ளலாம்.

கே. எஸ் இரத்தினம்,
பெரியதெரு, யாழ்ப்பாணம்.

## எஸ். கே. லோட்டன் அன்டு கோ.

பறங்கித்தெரு, யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணத்தில் காலஞ்சென்ற ஸ்ரீமான் க லோட்டன் காலம்தொடங்கி, நாங்கள் புகைப் படம் எடுத்து வருகிறோம். உங்களுக்கு உங்களைப்போல காண விருப்பமிருந்தாலும் அல்லது மற்றும் பட்சமுள்ளவர்களை நேரிற் காண வருப்பமிருந்தாலும் செய்வதென்ன?

எங்களுக்கு ஓர் கார்ட்டு எழுதி அறிந்து கொள்ளவும்.

மானேஜர்,
S. K லோட்டன் & Co.

## ஓரியன்டல் ஸ்டோர்ஸ்.

பெரியதெரு, யாழ்ப்பாணம்.

எங்களுடைய இதர வியாபாரங்களுடன் பலபேர் வேண்டுகோளின்படி வீட்டிற்கு வேண்டிய கதிரைகள், கட்டில்கள், மேசைகள், அலுமாரிஸ்கள பொதுவாக வீட்டிற்கு வேண்டிய எல்லாவித மரச்சாமான்களும், எங்களுடைய யாதிரிகளைக்கொண்டு திறமான தச்சர்களால் கொழும்பில் செய்வித்து யாவரும் விரும்பும் படியாயும் யாவரும் வாங்குவதற்கேற்ற விலைகளில் விற்கின்றோம்.

ஒருதரம் வந்துபாருங்கள்.

வ. அ. துரையப்பா,
Proprietor.

## யாழ்ப்பாணம் அப்போதுக்கரீஸ்.

(பொன்னுச்சாமி ஷாப்)
பெரியதெரு, யாழ்ப்பாணம்.

பட்டணத்திற்கு சாமான் வாங்கவந்தால், பிற கடைகளின் விலைகளை அறிந்திருந்தாலும் எங்கள் ஷாப்பின் விலைகளையும் சாமான்களையும் ஒத்துப்பார்த்து வாங்கவும்.

பலவிதமான வேஷ்டிகள சால்வைகள் ஷர்ட்ச் சீலைகள் மற்றுமுள்ள எல்லாச் சாப்பு சாமான்களும் நேரிலும், பிரத்தியேகமான ஏஜண்டுகள மூலமாகவும் வரவழைத்து விற்கின்றோம்.

டாக்குத்தர்களால் குறிக்கப்பட்ட எல்லாவித மருந்துவகைகளும், எங்கள் மருந்துசாப்பு பிரிவில், நற்சாட்சி பத்திரம் பெற்ற ஆட்களைக்கொண்டு, விலை சகாயமாயும், சுகாசுகமின்றியும், தயாரித்துக் கொடுக்கப்படும் எல்லா பேடன்ட் மருந்துகளும் கிடைக்கும்.

Dr. S. Ponnusamy,
Proprietor & Manager.


Printed by P. A. Krishnan for and on behalf of the Jaffna depressed classes Association Chunnakam published at the Saiva Pragasa Press, Vannarponnai, Jaffna.

Published & Printed by me
P. A. Krishnan.